

துணை முதலமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் புரவலருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை காமராசர் சாலையில் உள்ள பாரத சாரண, சாரணியர் இயக்க தலைமையகத்தில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பெருந்திரளணிக் கூடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, புடவைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ். மதன்மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மாமன்ற உறுப்பினர் ஏஆர்பி.எம். காமராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் புரவலருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை காமராசர் சாலையில் உள்ள பாரத சாரண, சாரணியர் இயக்க தலைமையகத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பேரணியை முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (15.8.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் அதிகளவில் பங்கேற்க விழிப்புணர்வு:

# இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் இருசக்கர வாகனப் பேரணி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.17-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். விளையாட்டு போட்டிகளை பார்வையிடும் பார்வையாளராக இல்லாமல், அனைவரும் போட்டிகளில் பங்கேற்க செய்வதற்காக முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் - 2025 நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 19 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கும், 25 வயதிற்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வரை பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும், தமிழ்நாடு அரசு மற்றும் அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள், தமிழ்நாட்டில் பணிபுரியும் ஒன்றிய அரசு பணியாளர்கள் ஆகியோருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1.00 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in/https://sdat.tn.gov.in வாயிலாக தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முன்பதிவு நடைபெற்று வருகிறது. முன்பதிவு செய்ய கடைசி நாள் 20.8.2025ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் அதனுடைய தலைவரும் சர்வதேச மோட்டார் பந்தய வீராங்கனையுமான செல்வி நிவேதா ஜெசிக்கா தலைமையில் இன்று (15.8.2025) சென்னையிலிருந்து புறப்பட்டு தாம்பரம், திண்டிவனம், விழுப்புரம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் இராமேஸ்வரம் வழியாக தனுஷ்கோடி சென்றடைந்து மீண்டும் 17.8. 2025 காலை புறப்பட்டு அன்று இரவே சென்னை வந்தடைகின்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8. 2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் மேற்கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்தது அம்பலமாகியுள்ளதால்

# பா.ஜ.க. கூட்டணியில் இருப்பவர்கள் மாற வாய்ப்புள்ளது!

## நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஆக.17-

வாக்காளர் பட்டியல் முறைகேடு நடந்துள்ளது அம்பலமாகி உள்ளதால் ஒன்றிய அரசையும் பிரதமரையும் நீக்கி விட்டு பாராளுமன்றத்திற்கு நீதிமன்ற தலையீட்டில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் தமிழகத்தில் இனி அந்த யுக்தியை பயன்படுத்த முடியாது என்பதால் பா.ஜ.க.கூட்டணியில் இருப்பவர்கள் மாற வாய்ப்புள்ளதாக நெல்லையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள பாரா விளையாட்டு அரங்கத்தினை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, பங்கேற்று விளையாட்டு அரங்கத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தனர்.

பின்னர் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டியின் போது செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் தங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. நாங்கள் சுயசார்பு உள்ள அமைப்பு என குறிப்பிட்டுள்ளது. அதிகமாக வாக்காளர்களை வைத்து பிரதமர் முதல் உள்ளாட்சி பிரதிநிதிகள் வரை தேர்ந்தெடுப்பதற்காக மிகச் சிறப்பான முறையில் ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடைபெற்று வந்தது. ஆனால் கடந்த தேர்தலில் அது சீர்குலைக்கப்பட்டுள்ளது.

**நீதிமன்றத்தின் சரியான தீர்ப்பு!**

உயிரிழந்ததாக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட ஏழு நபர்களோடு பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தேநீர் அருந்தினார். அநியாயமான முறையில் வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் வாக்காளர்களை நீக்கி உள்ளது. வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள் விவகாரத்தில் நடந்த மோசடி குறித்து நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளது. பிரதமர் வெற்றி பெற்ற வாரணாசி தொகுதியில் கூட வாக்காளர்கள் பட்டியலில் குளறுபடி ஏற்பட்டுள்ளது என்ற தகவலும் வெளியே வருகிறது. நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் தவறுகள் நடப்பதற்கு காரணம் தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுக்கும் முறையில் மாற்றம் செய்ததுதான்.

எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், உச்ச நீதிமன்ற நீதி அரசர் போன்றோர் அடங்கிய குழு தேர்தல் ஆணையர் யார் என்பதை முடிவு செய்ய ஐந்தாறு நபர்களை தேர்ந்தெடுத்து அதில் ஒருவரை தேர்தல் ஆணையராக நியமிப்பார் கள். ஆனால் அந்த முறையை மாற்றி பிரதமர் அவருக்கு கையடக்கமான ஒரு அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அடங்கிய குழு மூலம் தேர்தல் ஆணையர் தேர்ந்தெடுக்கும் பணி இப்போது நடந்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் கொள்கையில் மாற்றம் இருந்தாலும் கூட பிரதமரும் அவரது கையடக்க அமைச்சரும் சேர்ந்து தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற நடைமுறை இருந்து வருகிறது. இந்த நடைமுறையை உச்சநீதிமன்றம் ஏற்கனவே கண்டித்தது. ஆனால் அது அப்படியே அமுங்கி விட்டது.

புதிய நடைமுறையில் பிரதமர் மற்றும் அவரது கையடக்க அமைச்சரால் தேர்தல் ஆணையர் தேர்ந்தெடுக் கப்படுவதால் அவர் பி.ஜே.பி.தேர்தல் ஆணையராகவே செயல்படுகிறார். பிரதமரும் அவரது அமைச்சரும் சொல்லும் வேலையெல்லாம் தேர்தல் ஆணையர் செய்து வருகிறார். நாடு முழுவதும் தேர்தலின் போது வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்த ஐந்து மணிக்கு பின்னர் பிரதமரின் ஒப்புதலோடு எந்தெந்த தொகுதியில் எத்தனை வாக்குகள் பதிவேற்ற வேண்டும் என கம்ப்யூட்டர் மூலம் பட்டியலை வைத்துக்கொண்டு வாக்குகளை தேர்தல் ஆணையம் சேர்த்து விடுகிறது. அப்படி சேர்க்கப்பட்டதால் தான் பீகார் உள்ளிட்ட பல இடங்களில் பலர் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தலில் பல முறைகேடுகள் நடந்த பின்னரும் ஜனநாயக நாடான இந்தியா அமைதியாகவே உள்ளது. தேர்தல் ஆணையத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் மற்றும் மத்திய அரசை நீதிமன்றம் தலையிட்டு நீக்கம் செய்ய வேண்டும். புதிதாக பாராளுமன்றத்திற்கு தேர்தலை நடத்த வேண்டும் அது தான் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. காங்கிரஸ் ஆட்சியில் தான் வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் தான் முறைகேடு என காங்கிரஸ் அமைச்சரையே பா.ஜ.க. சொல்ல வைத்துள்ளது.

**தேர்தல் ஆணைய முறைகேட்டால் பா.ஜ.க. வெற்றி!**

பா.ஜ.க தேர்தலில் வெற்றி பெற்றது எப்படி என்பது அனைவருக்கும் இப்போது தேர்தல் ஆணைய முறைகேடு மூலம் தெரிந்துவிட்டது. இனி தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி வெற்றி பெற முடியாது, அந்த வாய்ப்பு இனி உருவாகாது. தேர்தல் ஆணையத்தை முறைகேடாக பயன்படுத்த முடியாது, இனி வெற்றி பெற முடியாது, என்பதை அறிந்து தமிழகத்தில் பா.ஜ.க கூட்டணியில் இருப்பவர்கள் கூட மாற வாய்ப்புள்ளது. நெல்லை பல்கலை பட்டமளிப்பு விழாவில் தமிழகத்திற்கு எதிராக செயல்படும் ஆளுனரிடம் இருந்து பட்டம் வாங்க மறுத்த மாணவி குறித்த கேள்விக்கு தமிழக பெண்கள் சுயமரியாதையோடும், வீரமாகவும் இருப்பவர்கள் என்றார்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறியாளர் அணி அறிமுக கூட்டம் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு உரையாற்றினார். மாநில பொறியாளர் அணி செயலாளர் SKP.கருணாநிதி, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் சி.பிரதீப், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், மாநில மகளிர் பிரச்சார குழு செயலாளர் தேன்மொழி, மாவட்ட அமைப்பாளர் சி.சுரேஷ், துணை அமைப்பாளர்கள் து.செந்தில்குமார், பா.ஆனந்த்குமார், ச.யுவராஜ் , ச.சிங்கரவேலன், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, கல்பட்டு வி.இராஜா, வேம்பி.ரவி, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஜெ.ஜெயபால், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி செயலாளர்கள் நைனா முகம்மது, பூக்கடை கணேசன், பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, மற்றும் ஒன்றிய, நகர பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி,79 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2025) சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற சுதந்திரதின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜுடன் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் கோயில் செயல்அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.